கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 2026 சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக்குழு சார்பில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் விளையாட்டு மேம்பாட்டு அணி தொடங்கப்பட்டது முதல், அந்த அணி சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள், இளைஞர்கள் விளையாட்டில் ஆர்வமிக்கவர்களை கழகத்தின் ஆதரவாளர்களாக்க மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெடுப்புகள் குறித்து கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உறுப்பினர்கள் – அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் தங்கம் தென்னரசு, விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தி.மு.கழகத்தின் வெற்றி 2026லும் தொடர்வதை உறுதி செய்திட, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக்குழுவை அமைத்தார்கள். அந்தக்குழுவின் சார்பில், ஒவ்வொரு அணிகளின் பணிகளையும் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகக் கழக சுற்றுச்சூழல் அணியின் நிர்வாகிகளின் பணிகளை நேற்று அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. இதில் கழக சுற்றுச்சூழல் அணி சார்பில் களத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து கழக இளைஞர் அணிச்செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், குழு உறுப்பினர்கள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் கேட்டறிந்தனர். மேலும், சுற்றுச்சூழலைக் காப்பதற்காக, நம் திராவிட மாடல் அரசு முன்னெடுக்கும் திட்டங்களை அறிவுத்தளத்தில் மட்டுமன்றி அனைத்துத் தரப்பு பொதுமக்களிடமும் கொண்டு சேர்ப்பது பற்றி சுற்றுச்சூழல் அணியின் நிர்வாகிகள் விரிவாக எடுத்துக்கூறினர். 2026 தேர்தலுக்கானப் பணியைச் சுற்றுச்சூழல் அணியினர் சுற்றிச்சுழன்று மேற்கொள்ள வேண்டுமென ஆலோசனைகளை வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் அணி ச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி, பூங்கோதை ஆலடி அருணா உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கிய, சட்டமன்றத் தேர்தலுக்கான கழக தேர்தல் ஒருங்கிணைப்புக்குழுவின் ஆலோசனைக் கூட்டத்தை அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில் நேற்று கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற கழக தகவல் தொழில் நுட்ப நிர்வாகிகளின் பணிகளை, ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்களுடன் இணைந்து ஆய்வு செய்தார். கடந்த 3 ஆண்டுகளில் ஐ.டி.விங் மேற்கொண்ட பணிகள் பற்றிய அறிக்கையை அளித்தார்கள். கழக அரசின் சாதனைகள் Social Mediaவில் கொண்டு சேர்க்கப்படும் விதம், கொள்கை எதிரிகளின் பொய்ப்புரட்டுகளுக்குப் பதிலடிக் கொடுப்பது உள்ளிட்டவை போன்ற அவர்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து தேர்தலுக்கான திட்டங்களையும் கேட்டறிந்தார். 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகம் மாபெரும் வெற்றியைப்பெற சமூக வலைத்தளத்தில் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென ஆலோசனைகளை இக்குழு வழங்கியது. இதில் குழு உறுப்பினர்கள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அணிச் செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, கவிஞர் மனுஷ்யபுத்திரன், கோவி.லெனின் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இந்திய விமானப் படையின் 92வது ஆண்டு விழாவையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற உள்ள போர் விமான சாகச நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (03.10.2024) களஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, பொதுப்பணித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, பொதுப்பணித் துறையின் சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை! நடிகர் பிரகாஷ்ராஜ் முன்னிலை!

திருச்சி சிவா எம்.பி. நூல்கள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிடுகிறார்!

அமைச்சர் துரைமுருகன் – கவிப்பேரரசு வைரமுத்து – பேரா.சுப.வீரபாண்டியன் பங்கேற்பு!

சென்னை, அக். 4-

திருச்சி சிவா எம்.பி. நூல்கள் வெளியீட்டு விழா நாளை (5.10.2024 - சனிக்கிழமை) மாலை 5.30 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நூல்களை வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார். திரைப்பட நடிகர் பிரகாஷ்ராஜ் விழாவிற்கு முன்னிலை வகிக்கிறார்.

இந்நூலின் முதல் பிரதியை கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் பெற்றுக் கொள்கிறார்.

இவ்விழாவில் கவிப்பேரரசு வைரமுத்து, திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

கழக கொள்கைப் பரப்புச் செயலாளரும், மாநிலங்களவை கழகக் குழுத் தலைவரும், நூலாசிரியருமான திருச்சி சிவா எம்.பி. ஏற்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியை கவிஞர் நெல்லை ஜெயந்தா தொகுத்து வழங்குகிறார்.

மனுதர்ம கொள்கைக்கு பதிலளிக்கக் கூடிய வகையில் - எனக்கு உயர்கல்வி

அமைச்சராகப் பொறுப்பு வழங்கியது திராவிட ஆட்சியின் எடுத்துக்காட்டாகும்!

உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பேட்டி!

தஞ்சாவூர் அக்.4-

உயர்கல்வித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று சொந்த தொகுதியான திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதிக்கு வருகை தந்த உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியனுக்கு மாவட்ட எல்லை பகுதியான அணைக்கரையில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. தலைமையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, முன்னிலையில் நாதஸ்வர மேளதாளங்கள் முழங்க ஆயிரக்கணக்கான தொண்டர்கள் புடைசூழ உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து தஞ்சை வடக்கு மாவட்டத்தை சேர்ந்த கழக நிர்வாகிகள் சால்வை அணிவித்தும், மலர் மாலைகள் அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்ததாவது,

திராவிட மாடல் ஆட்சி என்பது எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் ஏழை குடும்பத்தில் பிறந்த தொண்டனை உயர்கல்வித் துறை அமைச்சர் ஆக்கியது தான். கல்வி என்றால் நீ பயிலக் கூடாது.

கல்வி என்ற சொல் உன் காதில் கேட்டாலே காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்று வேன் எனும் மனுதர்ம கொள்கைக்கு பதிலளிக்கும் வகையில் எந்த சமுதாயத்தில் பிறந்தவர்கள் கல்வி பயிலக் கூடாது என்று சொன்னார்களோ இந்த சமுதாயத்தை சேர்ந்த என்னை உயர்கல்வித்துறை அமைச்சர் ஆக்கியது திராவிட மாடல் ஆட்சியாகும். ஒட்டு மொத்த இந்தியாவில் உள்ள பட்டியலின மக்களை காக்கக்கூடிய காவல் அரணாக முதல்வர் விளங்குகிறார் என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டாகும். 50 ஆண்டுகாலம் இல்லாத சாதனையை உயரிய துறையான உயர்கல்வித்துறையில் பட்டியல் இனத்தை சார்ந்தவரை அமைச்சராக்கி வரலாற்று சாதனையை முதல்வர் புரிந்துள்ளார். உயர்நீதிமன்ற நீதிபதியாக பட்டியல் இனத்தை சேர்ந்தவர் இடம்பெற வேண்டும் என பெரியாரும், அண்ணாவும் நினைத்ததை தலைவர் கலைஞர் நிறைவேற்றினார். அந்த அடிப்படையில் உயர் கல்வித்துறையில் பட்டியல் இனத்தை சேர்ந்தவருக்கு வாய்ப்பளித்தது முதல்வர் அவர்களின் செயல் திராவிட மாடலுக்கு எடுத்துக்காட்டாகும். முதல்வர் என்ன நினைக்கிறாரோ, துணை முதல்வர் உதயநிதி என்ன நினைக்கிறாரோ அதனை நிறைவேற்றும் சேவகனாக என்றும் பணியாற்றுவேன் என கூறினார்.

அதனை தொடர்ந்து திருப்பனந்தாள், சோழபுரம், அம்மாசத்திரம், திருபுவனம், திருவிடை மருதூர் கலைஞர் பாசறை ஆகிய இடங்களில் கழக தோழர்களின் வரவேற்பை பெற்றார். பின்னர் ஆடுதுறையில் உள்ள முன்னாள் அமைச்சர் கோசி.மணி அவர்கள் இல்லம் சென்று அவரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். ஆடுதுறை வீர சோழன் கோ.சி.மணி திருமண மண்டபத்தில் கழக தோழர்கள், வர்த்தக அமைப்பினர், கூட்டணி கட்சியினர் திரளாது கலந்துக்கொண்டு அமைச்சர் கோ.வி.செழியனை வாழ்த்தினர்.

இந்நிகழ்வில் கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாநில நிர்வாகிகள் ஆடுதுறை மு.உத்திராபதி, இராம.விஜயன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி. அய்யாராசு, க.நசீர்முகமது, துரை.முருகன், சாஸ்தா நடராஜன், ந.ஜெயலெட்சுமி, ஒன்றிய, பகுதி, பேரூர்ச் செயலாளர், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (03.10.2024) சென்னை மயிலாப்பூரில் திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் நவராத்திரி பெருவிழாவினை குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா. சுகுமார், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் ச. லட்சுமணன், பொ. ஜெயராமன், திருமதி கி.ரேணுகாதேவி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி

மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, அக். 4-

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக பொறியாளர் அணி மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ. வேலு விடுத்துள்ள அறிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டக் கழக பொறியாளர் அணிக்கு மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் பொறுப்புக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விருப்பமுள்ள கழக தொழர்கள் கீழ்க் கண்ட வழிமுறைகளின்படி விண்ணப்பிக்க வேண்டும்.

1. விண்ணப்பிப்பவர்கள் பொறியியல் பட்டபடிப்பு / பட்டையபடிப்பு நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்.

2. விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த பகுதியில் வாக்காளராக இருத்தல் அவசியம்.

3. ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் எனும் அளவுக்கு மிகாமல் பொறுப்புகள் நியமிக்கபட உள்ளது.

4. பெண் பொறியியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5. விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள QR CODE வழியே பொறியாளர் அணியின் போர்ட்டல் வழியே மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

6. விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களை நேரில் அழைத்து நேர்முக தேர்வு நடத்தப்படும்.

எனவே திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டக் கழக மாநகர, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் பொறியாளர் அணி நிர்வாகிகள் மேற்கண்ட விதி முறைகளின் படி விண்ணப்பங்களை இணைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகராட்சி பகுதிகளில் சுமார் 4.60 ஏக்கர் பரப்பளவில் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையத்தினை சிறுபான்மையினர் நலன் மற்றும் அயல்நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பார்வையிட்டு திட்ட பணிகளின் ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கர், மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வை.ஜெயக்குமார், உதவி ஆட்சியர் ஆயுஷ் குப்தா, திருத்தணி கோட்டாட்சியர் தீபா, தாசில்தார் மலர்விழி, திமுக நிர்வாகிகள் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, நகரச் செயலாளர் வி.வினோத் குமார், நகர மன்ற துணை தலைவர் ஆ. சாமி ராஜ், வார்டுச் செயலாளர் கராத்தா நாகராஜ், உள்பட அரசு அதிகாரிகள் நகர் மன்ற உறுப்பினர்கள் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்